அனுப்புநர்

க. கிருஷ்ணமூர்த்தி,
விலங்கியல் உதவிப் பேராசிரியர்,.
அரசு கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்-641 018

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள்,
கல்லூரிக் கல்வி இயக்குநரகம்,
சென்னை.

உரிய வழியாக

அன்புடையீர்,

பொருள் - விலங்கியல் உதவிப் பேராசிரியர் பணியினை ராஜினாமா செய்தல் - தொடர்பாக.

நான் 02.11.1998 முதல் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். சொந்த விருப்பத்தின் பேரில் எனது பணியை இன்று (01.08.2011) ராஜினாமா செய்கிறேன். அதற்குக் காரணமாக சில விஷயங்களை தங்களிடம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இச்சமூகத்தில் நடக்கும் பல நிகழ்வுகள் எனது அறிவுக்கு ஏற்படையதாக இல்லை. விலங்கியல் உதவிப் பேராசிரியர் என்ற முறையில் கிடைக்கும் ஊதியத்தில் நானும் எனது குடும்பமும் வளமாக இருக்கிறோம். இருப்பினும் இந்த வாழ்க்கையில் எனக்கு திருப்தியும், மன ஆறுதலும் கிடைக்கவில்லை எனக் கருதுகிறேன்.

பல கேள்விகளுக்கு விடைகாணும் நோக்கில் எனது வாழ்க்கைப் பயணம் சென்று கொண்டிருப்பதை உணர்கிறேன். மனிதர்களாகிய நாம் ஏன் இத்தனை அன்பற்றவர்களாக இருக்கிறோம் என்பது எனக்குப் புரியவில்லை. இவ்வளவு அறிவியல் முன்னேற்றங்களுக்குப் பின்னரும் ஏன் நம்மால் சிறந்த அறிவோடு வாழ இயலவில்லை? விலங்குகளையும், தாவரங்களையும், மண்ணையும் அழிப்பது எப்படி ஆறாவது அறிவாகவும், பகுத்தறிவாகவும் இருக்க முடியும்?

எத்தனையோ ஞானிகளும், புத்தர்களும், சித்தர்களும், அறிஞர்களும் தோன்றிய பின்னரும், இப்பூமியில் சிறுவர்களும், முதியவர்களும் இன்றும் பிச்சை எடுத்துத் திரிவது எப்படி? ஒரு சவரன் நகைக்காக கொலை நடப்பது ஏன்? இன்னும் திருட்டுத் தொழில் தொடர்வது எதனால்?

நிலத் தகராறில் மகனே தந்தையைக் கொல்கிறான். வேறு சாதிப் பையனை திருமணம் செய்ததற்காக மகளை அப்பாவே கடப்பாறையால் குத்திக் கொல்கிறார். இன்னும் காட்டுமிராண்டிச் சமுதாயம் இருப்பது எப்படி?

மனிதகுல அறிவைக் கொண்டு எல்லோருக்குமான, மிகச் சிறந்த உடல், மன மகிழ்ச்சிக்கான, சகோதரத்துவத்திற்காக ஒரு உலகத்தைப் படைக்க இயலாதா?

கடந்த பல வருடங்களாகவே எனது மனமும் அறிவும் இதைத் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. சரியாகச் சொல்வதென்றால் நான் சென்னையில் 1998ல் ஆராய்ச்சி மாணவராகவும், வேலைக்கான பணி ஆணையை எதிர்பார்த்தும் காத்திருந்த வேளையில், எனக்கு இந்த உலகினை அன்பும் அறிவும் கொண்ட ஒரு புதிய உலகமாக மாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வு அதி தீவிரமாக ஏற்பட்டது. இத்தனை வருடங்கள் கழித்தும் அதற்கான தேவையும், நியாயங்களும் அப்படியே தான் உள்ளது.

சமீபத்தில் மு. வரதராசனாரின் கி.பி. 2000 என்ற புத்தகம் படிக்க நேர்ந்தது. பல வருடங்களுக்கு முன் எனக்கு ஏற்பட்ட உள்ளுணர்வும் இந்தப் புத்தகத்தின் கனவும் ஒன்று போல் இருப்பது வியப்பான ஒன்று தான். புதிய உலகம் பற்றிய எனது கனவும் இதில் சொல்லப்பட்டுள்ள ஒரு பொதுவுடமைச் சமுதாயம் போன்றதே.

உலகில் உண்மையாக அன்பையும், பூரணமாக அறிவையும் மலரச் செய்வதே எனது வாழ்வின் பணியாகக் கொள்ளப் போகிறேன். எனது எஞ்சியுள்ள வாழ்வு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி எனது பெருமை மிகு தமிழ்க்குடி என்பதற்கு சான்றாக அமையும். முன்னேற்றம் என்ற பாதையில் செல்லும் இன்றைய சுயநல அறிவு, நிச்சயம் கல்லும் மண்ணும் கூட இல்லாத ஒன்றாகப் பூமியை ஆக்கி விடும். தமிழர் தம் அறிவுத் திறத்தாலும், தமது தியாகத்தாலும் மட்டுமே இதைத் தடுக்க இயலும். ஏனெனில் தமிழர் வேறு உலகம் வேறு அல்ல என்பது எனது முடிவு.

$p + q = 1$ என்ற பெயரில் நான் ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். எல்லோர் மனமும் அறிவும் முழுமையாக ஒப்புக் கொள்ளுமாறு நாம் அண்டவெளி ரகசியங்களை எடுத்துச் சொல்லத் தவறி விட்டோம் என நினைக்கிறேன். எனது புத்தகம் அதை நிறைவேற்றக் கூடும்.

பாவாணர் தாம் எழுதிய சில நூல்கள் மட்டும் வெளி வந்து விட்டால் தமிழர் தெளிவு பெற்று விடுவர் என்றும் தமிழ்நாடே மாறிப் போய் விடும் என்றும் கனவு கண்டதாகத் தெரிகிறது. தமிழர்களின் அறிவைக்குறைவாக மதிப்பிட்டு

விட்டார் போலும். தமிழர்களுக்கு மொழி உணர்வு, மத உணர்வைக் காட்டிலும் சாதி உணர்வே அதிகம் என்பது ஆகச் சிறந்த உண்மை.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதி நல்லவேளை மண்மூடிப் போய் விட்டார். இன்னும் சோமாலியாவில் தினமும் 250 குழந்தைகள் பசியால் சாகிறார்கள் என்ற செய்தி வருகிறது. யாதும் ஊரே ; யாவரும் கேளீர் ; என்று சொல்வதில் தமிழர்க்கு ஒரு பெருமையும் இல்லை.

நான் தங்களிடம் கூறிக்கொள்ள விரும்புவது, நான் சமச்சீர் சமுதாயம் என்றொரு உயர்ந்த லட்சியத்திற்காக மிகுந்த உள்ள உறுதியுடன் ஒரு மாவீரனைப் போன்று அன்பு, அறிவு என்னும் ஆயுதமேந்தி போரிடப் போகிறேன். என் பாதை எத்தகைய இடர் நிறைந்தது என்றும் போக வேண்டிய தூரம் எல்லையற்றது என்பதையும் அறிவேன்.

புற்று நோயால் வாழ்வின் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் அம்மா, கிராமத்தில் வாடகை அறையில் குடியிருக்கும் அப்பா, கட்டி முடிக்கப்படாத வீடு, கஷ்டப்படும் அக்கா, அண்ணன், எனது பண உதவி கிடைத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலையில் படிக்கும் இவர்களது பிள்ளைகள், கூலி வேலை செய்தே பிழைக்கும் இரத்த உறவுகள். இவர்களுக்கெல்லாம் நான் ஏதும் செய்ய இயலாத நிலையில் எனது பணியைத் துறப்பது யாராலும் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க இயலாதது.

ஒன்றே செய், நன்றே செய், அதுவும் இன்றே செய் என எனக்கு அறிவு புகட்டியது தமிழ்தான். வந்தாரையெல்லாம் வாழ வைக்கும் தமிழ் எனது குடும்பத்தையும் வாழ வைக்கிறதா? என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் பார்க்கட்டும்.

இப்போதைக்கு எனது ஒரே நம்பிக்கை எனது மனைவி தமிழரசி தான். இதே கல்லூரியில் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். திருமணத்திற்கு முன்பே எனது கனவுகள், லட்சியங்கள், எதிர்கால செயல்திட்டங்கள் எல்லாம் சொல்லி இவரது ஒப்புதலோடு தான் திருமணம் நடந்தது. குடும்பத்தை நன்றாகக் கவனித்துக கொள்வார் என உறுதியாக நம்புகிறேன்.

நான் இன்றிலிருந்து (01.08.11) 31.07.2021 வரை பத்து வருட காலங்களுக்கு உயர்வு தாழ்வு இல்லாத பொதுவுடமைச் சமுதாயம் படைக்க பொது வாழ்க்கைக்கு செல்கிறேன். மனித வாழ்க்கையின் மகத்துவத்தைப் பேசப் போகிறேன். ஒவ்வொருவர் மனசாட்சியையும் தட்டப் போகிறேன். முன் வைத்த

காலைப் பின் வைக்கப் போவதில்லை. பத்து வருடங்களுக்குப் பின் எனது ஊரும் தமிழ் உலகமும் எப்படி இருக்கிறது என்று பார்க்கப் போகிறேன்.

கல்லூரி ஆசிரியப் பணி வழங்கிய தமிழக அரசுக்கும், பல்வேறு கல்லூரிகளில் உடன் பணியாற்றிய துறை நண்பர்களுக்கும், சக பேராசிரியர்களுக்கும் நன்றிகள் பாராட்டுகிறேன்.

எனது வாழ்வு 2021ம் வருடத்திற்குள்ளாக சில கேள்விகளுக்கான பதிலைத் தந்திருக்கும். நீதி - அநீதி என்றும் நல்லது - கெட்டது என்றும் ஏதேனும் உண்டா என்பதற்கும் மனித வாழ்வு எதற்காக என்பதற்கும், கடவுள் என்று ஒருவர் இருக்க முடியுமா என்பதற்குமான பதில்களைத் தரலாம்.

இனி வரும் பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதே இனிமேல் உலகத்தாரின் வரலாறு.

அன்பும் அறிவும் உயர்வான
ஆணும் பெண்ணும் சமமான
எல்லா உயிர்க்கும் பொதுவான
"புதியதோர் உலகம் செய்வோம் "

(கிருஷ்ணா வந்தாச்சு, நிலா வந்தாச்சு, இது என் அன்பு அச்சுதன் அக்ஷயாவுக்காக)

தமிழ்கிருஷ்ணாவின் Count down starts now.

தங்கள் உண்மையுள்ள,

(க. கிருஷ்ணமூர்த்தி)

தேதி – 01.08.2011
இடம் - கோயமுத்தூர்

(நாடு சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகள் நடந்து முடிந்த பின்பும், சமூக, அரசியல், பொருளாதாரத் தளங்களில் உண்மையான மாற்றம் உருவாகி விடவில்லை. ஜமீன்தாரர்கள் ஒழிக்கப்பட்டனர். பெரு நிலக்கிழார்களின் ஆதிக்கம் அழியவில்லை. நிலச் சீர்திருத்தம் அறிவிக்கப்பட்டது. நிலமற்றோர் நிலை மாறவில்லை. சட்டப்படி தீண்டாமை தடுக்கப்பட்டது. தலித்கள் எரியூட்டப்படுவது தொடரத்தான் செய்கிறது. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. ஆனால் அது இன்னமும் பணக்காரர்களைத்தான் பராமரிக்கிறது. ஜனநாயக ஆட்சி நடக்கிறது. ஆனால், அரசியல் அமைப்பில் 'ஜனநாயகப்படுத்துதல் ' என்பதற்கு இடமே இல்லாமல் போய் விட்டது. புதிய பொருளாதாரம் பூத்துக் குலுங்கும் நிலையிலும் 40 சதவிகித மக்கள் வறுமையோடு தான் வாழ்க்கை நடத்துகின்றனர். நம்மை ஆட்சி செய்யும் அமைப்பின் சகல மட்டங்களிலும் ஊழல் ஆழமாக ஊடுருவி விட்டது. இன்றைய இந்தியத் தேவை ஜெயப்பிரகாஷ் நாராயண் கனவு கண்ட முழுமைப்புரட்சி ஒன்று தான்)

திரு. தமிழருவி மணியன் - ஜுனியர் விகடன் (31.7.11)
தமிழ் ஆதாரம் -(1)

Origin **CJB** | Shipper's Details

M/s Address K. திருஞானமூர்த்தி 18
G.AC
கோவை

Non Negotiable consignment note subject to standard conditions of carriage carriers Liability Limited to Rs.100/- per consignment for any cause. DO NOT BOOK CASH & BANNED ITEMS.
Sender's Signature

**THE PROFESSIONAL COURIERS**
533-C, Avanashi Road,
P.N. Palayam,
COIMBATORE - 37
Phone : 4225555

Consignment Note
№ 95263022

Consignee's Details | Destination

M/s Address உயர் கல்வி செயலாளர்
தலைமைச்செயலகம்
சென்னை

ATTN OF Mr.

Received in good Condition / Order

Date : Time : A.M.

Received by T.P.C.

Date : Time : A.M.

| | |
|---|---|
| Date | 30-7-11 |
| No. of Pieces | 1 |
| Weight | |
| CASH Rs. | 25 |
| Service Tax Applicable | |
| CREDIT Rs. | / |

CONSIGNOR COPY

பணம், நகை அனுப்பக்கூடாது. மீறி அனுப்பினால் கம்பெனி பொறுப்பல்ல.

---

Origin **CJB** | Shipper's Details

M/s Address K. திருஞானமூர்த்தி 18
கோவை

Non Negotiable consignment note subject to standard conditions of carriage carriers Liability Limited to Rs.100/- per consignment for any cause. DO NOT BOOK CASH & BANNED ITEMS.
Sender's Signature

**THE PROFESSIONAL COURIERS**
533-C, Avanashi Road,
P.N. Palayam,
COIMBATORE - 37
Phone : 4225555

Consignment Note
№ 95263024

Consignee's Details | Destination

M/s Address கல்லூரிக் கல்வி
இயக்குநர்
சென்னை

ATTN OF Mr.

Received in good Condition / Order

Date : Time : A.M.

Received by T.P.C.

Date : Time : A.M.

| | |
|---|---|
| Date | 30.7.11 |
| No. of Pieces | 1 |
| Weight | |
| CASH Rs. | 25 |
| Service Tax Applicable | |
| CREDIT Rs. | / |

CONSIGNOR COPY

பணம், நகை அனுப்பக்கூடாது. மீறி அனுப்பினால் கம்பெனி பொறுப்பல்ல.

---

Origin **CJB** | Shipper's Details

M/s Address K. திருஞானமூர்த்தி 18
G.AC
கோவை

Non Negotiable consignment note subject to standard conditions of carriage carriers Liability Limited to Rs.100/- per consignment for any cause. DO NOT BOOK CASH & BANNED ITEMS.
Sender's Signature

**THE PROFESSIONAL COURIERS**
533-C, Avanashi Road,
P.N. Palayam,
COIMBATORE - 37
Phone : 4225555

Consignment Note
№ 95263021

Consignee's Details | Destination

M/s Address அரசு கலைக் கல்லூரி
கோவை - 18

ATTN OF Mr.

Received in good Condition / Order

Date : Time : A.M.

Received by T.P.C.

Date : Time : A.M.

| | |
|---|---|
| Date | 30 7 11 |
| No. of Pieces | 1 |
| Weight | |
| CASH Rs. | 10 |
| Service Tax Applicable | |
| CREDIT Rs. | / |

CONSIGNOR COPY

பணம், நகை அனுப்பக்கூடாது. மீறி அனுப்பினால் கம்பெனி பொறுப்பல்ல.

09/08/11
கோயம்புத்தூர்.

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். திருச்சி சட்டசபைக்குட்பட்ட தொப்பயாங்குளம் எனது ஊர். இரத்னமூர்த்தி எனது பெயர். நான் வேதியியல், உளவியல், தத்துவம் மற்றும் சமயத்தில் முதுநிலைக் கல்வி கற்றுள்ளேன். நான் சென்னையில் கிண்டி வளாக உயர் வேதியியல் துறையில் CSIR JRF ஆக இருந்தபோது 1998-ம் வருட ஆகஸ்ட் மாத இறுதியில், சரியாகச் சொல்வதானால் கிருஷ்ண ஜயந்தியின் போது எனது எண்ணங்களில் நிறைய மாறுபாடுகள் ஏற்பட்டன. உலகம் அழியப் போகிறது என்றும் அதனை தடுப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பன போன்ற எண்ணங்கள் அவை.

அப்போது, திருவண்ணாமலைக்கு தேன் நிலவாகச் சென்றேன். பேருந்தில் பரவச நிலையில் செல்லும் போது திடீரென கருப்பன் வராா் (எனது குல தெய்வம்) என்ற பாடலும், மனதில் இருந்த உருவமும், புல்லாங்குழல் இசையும் கேட்டது. ஒரு நொடி நேரம் மட்டுமே. பின்னர் இயல்பு நிலைக்குத் திரும்பி இருந்தேன்.

சுகப் பயணமாக அது மாமண்டூர் எனத் தெரிந்து கொண்டேன். மாமண்டூர் என்றால் மா மண் Tour என்பதா அல்லது மா மண்டு ஊர் என்பதா என பொருள் பார்த்து திகைத்துவிட்டேன். அன்றிலிருந்து எனது ஊனில் நடப்பவற்றைக் கூர்ந்து கவனித்து வருகிறேன். அண்டத்திலுள்ளது பிண்டத்திலுப்பது போல் எனது ஊனில் நடப்பது உலகில் நடப்பதாக அல்லது உலகில் நடப்பதெல்லாம் ஊனில் நடப்பதாகக் கருத வேண்டியுள்ளது. ஞான மகிழ் போன்றே செப்பம்பா! அன்று திருவண்ணாமலைக்கு செல்லும் சென்றது ஏதோ ஒரு நோக்கத்தின் பொருட்டாக இருக்கலாம் அல்லவா?

கடந்த பதின்மூன்று வருடங்களாக இராமாயண, மகாபாரத வாசகங்கள் போன்று கடந்து விட்டது. எத்தனையோ வாழ்வியல் அனுபவங்கள், மனைவி, குழந்தைகள் என்று சென்று விட்டது. இருந்தும் முதலில் ஏற்பட்ட அந்த அனுபவங்களை மறுபடியும் மறுபடியும் நிகழ்வதாக உணர்கிறேன்.

நான் யார் என்று ரமண மகரிஷி கண்டறிந்தார் என்றால் நாம் யார் என என்னால் சொல்ல முடியும் என உறுதியாக நம்புகிறேன். அஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும் இணைக்கும் அனைவருக்கு எனது அனுபவங்கள் சான்றாக இருக்கின்றன.

கடவுளின் இருப்பை ஆதாரத்துடன் அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடியுமேயானால் என்னாகும். கல்கி பகவான் சொல்வது போல் 2012-ல் மதங்கள் அழியும் என உறுதியாக நம்பவேண்டியுள்ளது.

சைனர் (Chinese), ஜைனர் (Jains), சமணர், சானார் என்பதெல்லாம் ஒரே பொருள் தருபவை என்பதை யூகிக்கலாம். மூன்று பேருமே வியாபாரம் செய்கிறார்கள். ஏன் இந்த வேற்றுமை. தெய்வத்தைப் பெயர்போன சைனாவுக்கும், நிர்வாண சமணருக்கும் சேலைக்கு வரி போட்ட சானாருக்கும் என்ன வேற்றுமை? சானாரை கண்டால் திட்டு (தீட்டு?) என்பது எதனால். இதன் மறுபொருள் யாது?

அமணர் வாயில் துணி கட்டிக் கொண்டது ஏன்? எனது கூற்றின் படி அவ்வாறு சொல்லுக்கும் மறைப்பு வரைப்பு இருப்பு இருப்பதை அறிந்து கொண்டார்கள். சொல் இல்லாமல் தியும் என்பதால் அதனாலே கருத்துப் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தினார்கள். இறைவன் நாத வடிவமும் கொண்டவன் என்பதை மறந்தார்கள் போலும். ஆன்மா என்றொரு கருத்தியலில் திருமணம் செய்யாமல் இருந்து கொண்டு பெண்களுக்கு வீடுபேறு ஒருபோதும் இல்லை என மறுத்துவிட்டார்கள்.

உடலும், சொல்லும், ஆசையும் இல்லாமல் வெறுமனே இருந்துதான் என்ன பயன்?

காலத்தில் முன்னோக்கியும் பின்னோக்கியும் செல்ல முடிந்தால் நாம் பல உண்மைகளைக் கண்டறியலாம். அதற்கு நாம் இரண்டு திசையிலும் பயணிக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால், தமிழின் வேரையொட்டு வார்த்தையைக் கொண்டு மொழி வரலாற்றைச் சொல்லிட கூட முடியும் என்பது திண்ணம். (வேரைக் கொண்டு மரபணு கொண்டு அறிவியலாளர் கண்டுபிடிப்பது போல்)

என்னைக் கேட்டால் பிரபஞ்ச இரகசியங்களைச் சொல்ல அரி, பரி, கரி, நரி என்ற நான்கு வார்த்தைகளே போதும். இதனை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

கடவுள் இருக்கிறாரா என்ற தேடலில் நானே கடவுளாக மாறிவிட்டேனோ என ஐயுற வேண்டியுள்ளது. கல்லூரிப் பேராசிரியர் எப்படி அளவாட முடியும்?

நான் தங்களிடம் வேண்டுவது, தமிழின் துணை-கொண்டும், அறிவியலை அடிப்படையாகக் கொண்டும் நம்மால் இவ் உலகை சொர்க்கமாக மாற்ற இயலும். இதற்கான முயற்சியை நான் தொடங்கிவிட்டேன். இதற்கு எனக்கு 10 வருட காலமே உள்ளது. தங்களின் உதவியாக, இத்துடன் அனுப்பியுள்ள, புத்தகத்தின் சிறு பகுதியை (P+q =1 என்பது தலைப்பு)யும், விடுதலை என்ற பெயரில் ஒரு தந்தைக்கு எழுதிய கடிதம், ஒரு பதவி விலகல் கடிதம் இவற்றை ஜூ.வி.யால் வெளியிட இயலுமா? கடந்த 13 வருடங்களாக சமூகத்தை எனக்குப் படம்பிடித்துக் காட்டுவது ஜூ.வி. தானே. எனக்கு உரிமை இருப்பதாக நினைக்கிறேன்.

சாதிப்பற்றோ, மதவெறியோ எனக்கு சிறிதும் இல்லை. அரசியல் பின்புலம், சாதி ஆதரவு, பண வசதி இவை ஏதுமில்லை. நடப்பது தவறுகள் என ஐயம் திரிபற ~~[illegible]~~ ஒரு இந்த அறப்போரினை தனிமனிதனாக ஆரம்பிக்கின்றேன்.

வரும் செப்டம்பர்-1-ம் தேதி நாம் யார்? என்ற ஒரு புரட்சியைத் துவங்குகிறேன். உங்கள் வாழ்த்துக்களையும், எனக்கு ஒரு சிறு அங்கீகாரத்தையும் கொடுத்தால் போதும் பாதை மிகவும் சரியென அடையாளம் கண்டு கொள்வேன்.

நான் புகழுக்கோ, பணத்திற்கோ, மற்றவர் கொண்டாடுவதற்கோ பொது வாழ்க்கைக்கு வரவில்லை. மற்றவர்க
-ளால்

முடியாததாலேயே நான் வரவேண்டியதாகி விட்டது. இது காலத்தின் கட்டாயம்.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இந்துத்துவம் இஸ்லாம் என்ற இந்த ஆறு மதங்களும் தமிழனின் வாழ்வில் எப்படி சாதியாய்ப் பின்னிப் பிணைந்துள்ளது என்பதைச் சொன்னால் தமிழர் தெளிவு பெறக்கூடும். சொல்வது நமது கடமையல்லவா.

( புத்தகத்தின் சிறு பகுதியை அப்படியே பிரசுரம் செய்தால் தொடர்ச்சி மாறாமல் இருக்கும் என்பது எனது கருத்து. தமிழர்களில் என்ன மாதிரியான எதிர் வினைகளை, அறிவுப் பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை உண்டு பண்ணும் எனத் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கிறேன் )

நல்லதே நினைப்போம். நல்லதே நடக்கும்.

மிக்க நன்றி.

நிரந்தர முகவரி.
க. கிருஷ்ணமூர்த்தி
தொப்பலாக்கரை (P.O.),(VIA),
அருப்புக்கோட்டை (T.K),
விருதுநகர் (DT) - 626114

தோழமையுடன்.

09/08/11

இருப்பு.
3F, வீட்டு வசதி வாரியம்,
DRO காம்பவுண்ட்,
ரேஸ் கோர்ஸ்,
கோயம்புத்தூர் - 641018

இணைப்பு:

1. பதவி விலகல் கடிதம் - நகல்
2. புத்தகத்தின் ஒரு பகுதி - நகல்
3. விருதுகளை - கடிதம் - நகல்
4. சொத்து விபரம் - அசல்.

பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டதால், எனது சொத்து விபரங்களைத் தெரிவிப்பது எனது கடமை. மக்களின் மனசாட்சியான ஜூ.வி.யிடமே இதனைச் சமர்ப்பிக்கிறேன். நான் 02.11.1958 முதல் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறேன். எனது சொத்து விபரம் கீழ்க்கண்டவாறு.

1. க. கிருஷ்ணமூர்த்தி யாகிய எனக்கு,

    ஒரு கிராம் அளவிற்குக் கூட நகைகளோ (தங்கம், வைரம்) ஒரு செண்ட் அளவிற்குக் கூட நிலமோ கிடையாது. எனது பெயரில் வங்கியில் ரூ 5000/ இன்றைய தேதியில் (09/08/11) இருப்பு உள்ளது.

    ஆயுள் காப்பீட்டிற்கு மாதாமாதம் ரூ 1086/- இனி என் மனைவியே கட்ட வேண்டும். அதே போன்று பாலிசி காப்பீடு ரூ 893, ரூ 2015 மாதாமாதம் மனைவியே கட்ட வேண்டும்.

    - வேறு எந்த ஆபரணமும் இல்லை.
    - வாகனம் எதுவும் இல்லை.

2. எனது மனைவி திருமதி தமிழரசிக்கு,

    தொப்பம்பாக்கரை கிராமத்தில் 3.65 சென்ட் இடமும், ரூ 6,00,000 மதிப்பில் கட்டிக் கொண்டிருக்கும் வீடும், மொத்தமாக 25 சவரனுக்கு மேல் தங்க நகைகளும் உண்டு. வெள்ளிப்பாத்திரங்களோ, வைர நகைகளோ இல்லை.

    - பஜாஜ் ஸ்கூட்டர் (wave) உள்ளது.

3. குழந்தைகளுக்கு சிறு, சிறு கம்மல்கள் இருக்கிறது (2 அல்லது 3 சவரன்)

4. எனது அப்பாவிற்கு தொப்பம்பாக்கரை கிராமத்தில் இரண்டு ஏக்கர் தரிசு நிலமும், 1 சென்ட் வீட்டு மனையும் உண்டு.

எங்களுக்கு எந்த விதமான கடனோ, வங்கி லோனோ கிடையாது. மேலே கூறிய அனைத்தும் உண்மையென சொல்லுகிறேன்.

09.08.11
கோயம்புத்தூர்.

[signature]
09/08/11

| Origin **CJB** | Shipper's Details | 18 | Consignee's Details | Destination | Date 9-8-11 |
|---|---|---|---|---|---|
| M/s Address | Krishna murthy Cbe | | M/s Address | Kannan Chennai | No. of Pieces: 1 |
| | | | | | Weight |
| Non Negotiable consignment note subject to standard conditions of carriage carriers Liability Limited to Rs.100/- per consignment for any cause. DO NOT BOOK CASH & BANNED ITEMS. Sender's Signature | | | ATTN OF Mr. | | CASH Rs. 25 |
| THE PROFESSIONAL | | | Received in good Condition / Order | | Service Tax Applicable |
| Consignment Note Nº 95267368 | COURIERS 533-C, Avanashi Road, P.N. Palayam, COIMBATORE - 37 Phone : 4225555 | | Date : Time ; A.M. | | CREDIT Rs. |
| | | | Received by T.P.C. Date : Time : A.M. | | CONSIGNOR COPY |

பணம், நகை அனுப்பக்கூடாது. மீறி அனுப்பினால் கம்பெனி பொறுப்பல்ல.

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். நான் கடந்த 09/08/11 அன்று, எனது பணியை பொதுவாழ்க்கை வேண்டி ராஜினாமா செய்த கடித நகல், p+q=1 என்ற புத்தகத்தின் சிறுபகுதி, மருதமலை என்ற பெயரில் எனது தங்கைக்கு எழுதிய கடித நகல் இவற்றை அனுப்பி இருந்தேன். செப்டம்பர் மூன்றாம் தேதி நாம் யார் என்ற கருத்தை வலியுறுத்தி எனது பொதுவாழ்க்கையைத் தொடங்கப் போவதாகவும் குறிப்பிட்டு கடிதம் எழுதி இருந்தேன். என்னைப் பற்றிய உங்களது அறிமுகத்தையும் அக்கடிதத்தில் வேண்டி இருந்தேன்.

மிகத் தவிர்க்க இயலாத காரணத்தால், தற்போதைக்கு என்னால் பொதுவாழ்க்கைப் பரீட்சார்த்தத்தைத் துவக்க இயலவில்லை. எனவே என்னைப் பற்றிய அறிமுகமும், எனது புத்தக அறிமுகமும் ஜூ.வி.யால் வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஜூ.வி. வரை என்னைப் பற்றிய எந்தக் குறிப்பும் ஜூ.வி.யில் வெளிவரவில்லை.

இன்று பணியில் (22/08/11) மீண்டும் சேர்வதால், உயரவர்களிடம் அனுமதி பெற்றே எதையும் நான் வெளியிட இயலும் என்பதை தாங்கள் அறிவீர்கள். ஒருவேளை எனக்கு எழுதும் திறமை இருப்பதாகத் தாங்கள் கருதினால் p+q=1 என்ற தலைப்பிட்ட புத்தகத்தை ஜூ.வி.யில் எழுத மிகவும் விருப்பமாக இருக்கிறேன். இது இரு உலகங்கள் பற்றிய, உண்மைகளை அறிவியல் பூர்வமாக நிரூபிப்பதாக அமையும். இதைப் பற்றி தாங்கள் ஏதேனும் கலந்துரையாட விரும்பினால் நான் விருப்பமாக இருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி

22/08/11
கோயம்புத்தூர்.

தங்கள் உண்மையுள்ள
22/08/11
க.திருஞானமூர்த்தி.
3F. TNHB,
DRO Compound,
Race Course,
Coimbatore - 641 018
9443420305

இணைப்பு

1. மீள்பணியேற்பு கடிதம் - நகல்.

| | | | | |
|---|---|---|---|---|
| Origin **CJB** | Shipper's Details | Consignee's Details | Destination | Date 22/8/11 |
| Address கிருஷ்ணகிரி 18 | | M/s Address சென்னை | | No. of Pieces 1 |
| | | | | Weight |
| | | சென்னை | | CASH |
| | | ATTN OF Mr. | | Rs. 25 |

Non Negotiable consignment note subject to standard conditions of carriage carriers Liability Limited to Rs.100/- per consignment for any cause. DO NOT BOOK CASH & BANNED ITEMS.

Sender's Signature

**THE PROFESSIONAL COURIERS**

533-C, Avanashi Road,
P.N. Palayam,
COIMBATORE - 37
Phone : 4225555

Consignment Note

No 95273254

Received in good Condition / Order

Date : Time : A.M.

Received by T.P.C.

Date : Time : A.M.

**Service Tax Applicable**

CREDIT

Rs.

CONSIGNOR COPY

பணம், நகை அனுப்பக்கூடாது. மீறி அனுப்பினால் கம்பெனி பொறுப்பல்ல.

அனுப்புநர்

க. கிருஷ்ணமூர்த்தி,

விலங்கியல் உதவிப் பேராசிரியர்,

அரசு கலைக் கல்லூரி,

கோயம்பத்தூர் - 641 018.

பெறுநர்

கல்லூரி கல்வி இயக்குநர் அவர்கள்,

கல்லூரி கல்வி இயக்குநரகம்,

சென்னை - 600 006

உரிய வழியாக

அன்புடையீர்

பொருள் : புத்தகம் எழுதி வெளியிட அனுமதி

வேண்டுதல்- தொடர்பாக.

வணக்கம் நான் 02.11.1998 முதல் விலங்கியல் துறையில் பணியாற்றி வருகிறேன். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள தொப்பலாக்கரை எனது சொந்த ஊர். இந்த ஊர் மக்களின் வாழ்க்கை முறைகளை ஆவணப்படுத்தும் நோக்கில் ஒரு புத்தகம் எழுதி வெளியிட விரும்புகிறேன். இப்புத்தகத்தை சொந்தமாகவோ அல்லது பதிப்பகம் மூலமாகவோ வெளியிட தங்களின் அனுமதி வேண்டுகிறேன்.

புத்தகம் எழுதுவதன் மூலம் எனது ஆசிரியப்பணியோ துறைப்பணியோ எவ்விதத்திலும் குறைவுபடாது என உறுதியளிக்கிறேன். மேலும் இதற்காக அரசிடமிருந்து எந்தவிதமான நிதியுதவியும் கோரமாட்டேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி

கோயம்பத்தூர்

25/06/2014

இப்படிக்கு

25/06/14

(க. கிருஷ்ணமூர்த்தி)

25/6/14

HEAD
PG & RESEARCH DEPARTMENT OF ZOOLOGY,
GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS),
COIMBATORE - 641 018.

அனுப்புநர்

 க.கிருஷ்ணமூர்த்தி
விலங்கியல் உதவிப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர்-641 018.

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள்,
கல்லூரி கல்வித்துறை,
கல்லூரிச் சாலை,
சென்னை- 600 006.

உரிய வழியாக,

அன்புடையீர்,

பொருள் : 'புதியதோர் உலகம் செய்வோம்' எனும் தலைப்பில் சமூக சிந்தனைப் புத்தகம் எழுதி வெளியிட அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

வணக்கம். நான் 02-11-1998 முதல் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். சமூகத்தை மேம்படுத்தும் நோக்கில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட விரும்புகிறேன். புத்தகத்தை எழுதுவதால், எனது அன்றாடக் கல்லூரிப் பணிகள் பாதிக்காதவாறு ஒய்வு மற்றும் விடுமுறை நாட்களில் எழுதுகிறேன் என்பதைத் தெரிவிக்கிறேன். மேலும் புத்தகத்தை வெளியிட அரசிடமிருந்து பணம் எதுவும் கோரமாட்டேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். உலகில் சிறந்ததொரு சமூகம் உருவாக வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் புத்தகம் எழுதுவதால் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற புத்தகத்தை எழுதி வெளியிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மிக்கநன்றி

க.கிருஷ்ணமூர்த்தி

தேதி : 22.02.2016
இடம் : கோயம்புத்தூர்